# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2009 செப்டம்பர் திங்கள் 29.09.2009–ம் நாள் செவ்வாய் கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்றது

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

**பொருள் எண் : 1**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட துறைமுக தெருவில் எலைட் ஹார்டுவேர்ஸ் அருகில் 4” சுவிஸ் வால்வு லீக். KSSS காலனியில் 2” பகிர்மான குழாய் உடைப்பு. சாஸ்தான்கரை அரசு போக்குவரத்து கழகம் முன்பு 3” பகிர்மான குழாய் உடைப்பு ஆகியவற்றை சரிசெய்வதற்கு ரூ.4300/–க்கு மதிப்பீடு தயார் செய்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.3480/09/இ1)

**தீர்மானம் எண்.994: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 2**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பாலாத்தங்கரை ஆழ்துளை கிணறு எண்.15–ல் உள்ள GI பைப்புகள் பழுது அடைந்துள்ளதால் அந்த GI பைப்புகளை மாற்றிடவும் புதிய 4 பிவிசி பைப்புகளை மாற்றுவதற்கும் சம்புவில் leak ஆகும் வால்வுகளை மாற்றி புதிதாக அமைப்பதற்.கும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.25000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.3481/09/இ1)

**தீர்மானம் எண்.995: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 3**

2009–2010–ம் ஆண்டின் முதல் அரையாண்டு வரை குளச்சல் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம், குத்தகை நிலுவை, கடை வாடகை மற்றும் இதர லைசென்ஸ் கட்டணங்களை உடனடியாக செலுத்தக் கேட்டு இந்நகர் பொதுமக்களுக்கு ஒலி பெருக்கி மூலம் 23.9.2009 முதல் குறிப்பிட்ட நாட்களில் விளம்பரம் செய்வதற்கும் (மைக்செட், டீசல், பெட்ரோல், ஆயில் உட்பட) அதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.15000/–க்கும் நகர்மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அ.குறிப்பு**

1.மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, தலைவர் அவர்களின் முன்அனுமதியுடன் ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.4311/09/அ1)

**தீர்மானம் எண்.996: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 4**

**குளச்சல் நகர்மன்றத்தின் 3–வது வார்டு உறுப்பினர் கொண்டு வரும் தீர்மானம் :**
1.தமிழ்நாடு அரசு வழங்கி வந்த ஏழை பெண்கள் திருமண உதவிதிட்டத்தின் கீழ் ரூ.20000/– பயனாளிகளுக்கு திருமணமாகி ஒருவருடமாகி இன்னும் உதவித்தொகை வழங்காமலும், மேலும் காலம் கடத்தாமல் உதவித்தொகையினை உடனடியாக வழங்கிட தமிழக அரசை கேட்டு தீர்மானம் நிறைவேற்ற வேண்டுதல்.
2.தமிழக அரசு வழங்கும் ஏழைப்பெண்கள் மகப்பேறு உதவித்தொகை பேறுகாலத்திற்கு முன் மூன்று மாதமும் பேறுகாலத்திற்கு பின் மூன்று மாதம் என ரூ.6000/–ம் வழங்குவதை காலதாமதமின்றி வழங்கிட கேட்டு தீர்மானம் நிறைவேற்றவேண்டுதல்.
**அ.குறிப்பு**
மன்றம் தீர்மானிக்கலாம்.
(ந.க.எண்.4269/09/எச்3)
**தீர்மானம் எண்.997: தமிழக அரசின் மூவாயூர் இராமமிர்தம் நினைவு திருமண உதவித்திட்டம் காலதாமதமின்றி நடைமுறைபடுத்திடவும், முன்பிருந்தபடியே நகராட்சி மூலமாக விண்ணப்பங்கள் பெறப்பட்டு, திட்ட அமுலாக்கம் செய்திடவும், ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. டாக்டர்.முத்துலட்சுமி நினைவு மகப்பேறு உதவித்திட்டத்தின் பயனாளிகளின் எண்ணிக்கையை ஆண்டிற்கு 75 நபர்களுக்கு என்று வரையறை செய்யப்பட்டுள்ளதை உயர்த்தி, விண்ணப்பதாரர் (தகுதியான) அனைவருக்கும் வழங்கிட தமிழக அரசினைக்கேட்டும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 5**

குளச்சல் நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2009–2010.ன் கீழ் ஏசுதாஸ் காலனியில் சிறுபாலம் கட்டுவதற்கு ரூ.2.00 லட்சம் மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் நிர்வாக அனுமதி மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட்டதை தொடர்ந்து 27.8.2009–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.எஸ்.டேவிட்ராஜ் | 4.18% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.207472.80) |
| 2. | திருமதி.கலைச்செல்வி | 5.67% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.210450.00) |

**அ.குறிப்பு**
1.மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2.பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பந்ததாரர்களும் வைப்புத் தொகை செலுத்தி உள்ளார்கள்
3.மேற்காணும் வேலைக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட்டுள்ளது.
4.பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்களும் மதிப்பீட்டைவிட அதிகமாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளனர். இதில் திரு.டேவிட்ராஜ் என்பவர் இருவரில் குறைவாக 4.18% மதிப்பீட்டைவிட அதிகமாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.

மேலும் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று இருவரில் குறைந்த

ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.டேவிட்ராஜ் என்பவருக்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2991/09/இ1)

**தீர்மானம் எண்.998: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 6**

குளச்சல் நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2009–2010.ன் கீழ் மரமடி குருசடி அருகில் சிறுபாலம் கட்டுவதற்கு ரூ.2.00 லட்சம் மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் நிர்வாக அனுமதி மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட்டதை தொடர்ந்து 27.8.2009–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.எஸ்.டேவிட்ராஜ் | 4.19% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.207502.80) |
| 2. | திருமதி.கலைச்செல்வி | 5.67% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.210450.00) |

**அ.குறிப்பு**

1.மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2.பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பந்ததாரர்களும் வைப்புத் தொகை செலுத்தி உள்ளார்கள்
3.மேற்காணும் வேலைக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட்டுள்ளது.
4.பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்களும் மதிப்பீட்டைவிட அதிகமாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளனர். இதில் திரு.டேவிட்ராஜ் என்பவர் இருவரில் குறைவாக 4.19% மதிப்பீட்டைவிட அதிகமாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.

மேலும் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று இருவரில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.டேவிட்ராஜ் என்பவருக்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2991/09/இ1)

**தீர்மானம் எண்.999: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 7**

குளச்சல் நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2009–2010.ன் கீழ் சிங்கன்காவு சாலையில் ஒற்றைக்கண் பாலத்திலிருந்து நடைபாதையுடன் கூடிய மழைநீர் ஓடை கட்டுவதற்கு ரூ.9.00 லட்சம் மதிப்பீட்டில் எடுத்து செய்வதற்கு 26.8.2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.ஜாண் ரெக்சலின்ஜோஸ் | 4.96% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.914565.00) |
| 2. | திரு.தேவகரீம்சேம் | 7.43% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.936145.00) |

அ.குறிப்பு

1..பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பந்ததாரர்களும் வைப்புத் தொகை செலுத்தி உள்ளார்கள்

2.மேற்காணும் வேலைக்கான மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றம் தனது 31.7.2009—ம் தேதிய 947—வது எண் தீர்மானத்தில் ஒப்புதல் வழங்கி உள்ளது.

3.பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்களும் மதிப்பீட்டைவிட அதிகமாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளனர். இதில் திரு.ஜாண் ரெக்சிலின்ஜோஸ் என்பவர் இருவரில் குறைவாக 4.96% மதிப்பீட்டைவிட அதிகமாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.

மேலும் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று இருவரில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஜாண் ரெக்சலின் ஜோஸ் என்பவருக்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.2305/09/இ1)

**தீர்மானம் எண்.1000: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 8**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மெயின் ரோட்டில் கோமதி டவுண்ஹால் முதல் சுகந்தம் திருமண மண்டபம் வரையுள்ள மழைநீர் வடிகால் ஓடையில் தேங்கியுள்ள கழிவுநீரை உறிஞ்சி லாரி மூலம் அகற்றும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.24000/—க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று 28.8.2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள்கோரப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ எண். | ஒப்பந்தக்காரா் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1. | அசோக் செப்டிக் டேங்க் கிளினிங், நாகர்கோவில். | 16.67% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 2. | உதயகுமாா் செப்டிக் டேங்க் கிளினிங், நாகர்கோவில். | மதிப்பீட்டு விலை விகிதம் (ரூ.24000.00) |

அ.குறிப்பு

1..மதிப்பீட்டுத் தொகை ரூ.24000/—க்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2.மேற்காணும் வேலைக்கான மதிப்பீட்டிற்கு அவசரம் அவசியம் கருதி 1.8.2009 அன்று நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

3.பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்களும் வைப்புத்தொகை செலுத்தி உள்ளார்கள்.

4.பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் உதயகுமார் செப்டிக்டேங்க் கிளினிங் மதிப்பீட்டு விலை விகிதத்தையே அளித்துள்ளார். மேலும் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி 31.8.2009 அன்று நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கண்ட இருவரில் மதிப்பீட்டு விகிதத்திற்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.உதயகுமார் செப்டிக்டேங்க் கிளினிங், நாகர்கோவில் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.1001: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 9**

குளச்சல் நகராட்சியில் **1–8–09** முதல் **31–8–09** முடிய செலவு செய்யப்பட்ட கீழ்க்கண்ட தலைப்பிலான செலவினச் சீட்டுகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**1.பொது நிதி செலவு சீட்டுகள்:**

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 387 | 388 | 389 | 390 | 391 | 392 | 393 | 394 | 395 | 396 | 397 | 398 |
| 399 | 400 | 401 | 402 | 403 | 404 | 405 | 406 | 407 | 408 | 409 | 410 |
| 411 | 412 | 413 | 414 | 415 | 419 | 420 | 421 | 422 | 423 | 424 | 425 |
| 426 | 427 | 428 | | | | | | | | | |

**2.குடிநீர் திட்ட நிதி செலவு சீட்டுகள்:**

53 54 55 56 57 58 59 60 61 62 63

**3.SFC O and M Gap Filling திட்ட செலவு சீட்டுகள்:**

416 417 418 430 431 432

**4.பன்னிரண்டாவது நிதிக்குழுத் திட்ட பணி செலவு சீட்டுகள்:**

429 433

**அ.குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.1002: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 10**

**2009–2012–ம்** ஆண்டு முடிய இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தின் அருகிலுள்ள டெம்போ மினி வேன் நிறுத்தம் இடத்தின் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் தொடர்பான ஏலம் **27.8.09** அன்று பொது ஏலம் நடைபெற்றது. **2009–2010** ஓராண்டுக்கு கேட்டுள்ள ஏலகேள்வி விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஏலதாரர் பெயர் | கேட்கப்பட்டுள்ள உயர்ந்தபட்ச ஏலகேள்வி |
|---|---|---|
| 1 | திரு.ஜாண்பீட்டர் | ரூ.49500/– |
| 2 | திரு.சகாய ஆன்றனி | ரூ.49300/– |

**அ.குறிப்பு**

**1.**ஏலகேள்வி கூடுதலாக கேட்ட திரு.ஜாண்பீட்டர் ஏலதாரரின் ஏலகேள்வியை ஒப்புகொள்வது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

**2.**அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தலைவர் அவர்களின் முன் அனுமதியுடன் கூடுதல் ஏலக்கேள்வித்தொகை கேட்டுள்ள திரு.ஜாண்பீட்டர் அவர்களின் ஏலக்கேள்வித் தொகை ஒப்புக்கொண்டு உரிமம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.11062/08/அ2)

**தீர்மானம் எண்.1003: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் :11**

குளச்சல் நகராட்சி துப்புரவு பணியாளர்கள் குடியிருப்பு அருகில் 2 தென்னை மரங்கள் குடியிருப்புகளின் மீது விழக்கூடிய வகையில் ஒன்று கீழே சரிந்தும் ஒன்று விழக்கூடிய நிலையிலும் இருப்பதால் இரண்டு தென்னை மரங்களையும் ஏலம் விட்டு வெட்டி அப்புறப்படுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு
மன்றம் அனுமதி வழங்கலாம்.
**தீர்மானம் எண்.1004: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் :12**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சீம்பிளிவிளையில் உள்ள ஆழ்குழாய் கிணற்றில் உள்ள மோட்டார் பழுது அடைந்த உள்ளதால் குடிநீர் விநியோகம் பாதிப்படைந்துள்ளது. மேற்கண்ட பழுதினை சரி செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.10000/— ஆகும். எனவே மேற்கண்ட பணியினை செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு
மன்றம் அனுமதி வழங்கலாம்.
**தீர்மானம் எண்.1005: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் :13**

குளச்சல் நகராட்சி 21—வது வார்டில் உள்ள இலப்பவிளையில் சாலையை விரிவுபடுத்தும் நோக்கில் கதவு எண்.30/39—4 முதல் மின்கம்ப எண்.F11/42 வரையில் உள்ள மழைநீர் வடிகால் ஓடையில் Covering Slab அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகர்மன்றத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினரால் அறிவுறுத்தப்பட்டதன் அடிப்படையில் மேற்கண்ட இடத்தில் ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால் ஓடையில் கான்கிரீட் கவரிங் சிலாப் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.150000/— ஆகும். எனவே மேற்கண்ட பணியினை செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு
மன்றம் அனுமதி வழங்கலாம்.
**தீர்மானம் எண்.1006: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் :14**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 3—வது வார்டில் IDSMT திட்டத்தின் கீழ் சன்னதி தெருவில் மழைநீர் வடிகால் ஓடை கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும் அதன் தொடர்ச்சியாக சன்னதி தெருவில் அம்மன்கோயில் அருகில் மழைநீர் வடிகால் ஓடை அமைத்து தருமாறு அப்பகுதி நகர்மன்ற உறுப்பினர் மற்றும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்ததின் அடிப்படையில் நகர்மன்றத்தலைவரால் மழைநீர் வடிகால் ஓடை மூடியுடன் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டதன் அடிப்படையில் ரூ.720000/—க்கு மதிப்பீடு தயார் செய்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு
மன்றம் அனுமதி வழங்கலாம்.
**தீர்மானம் எண்.1007: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் :15**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN 74-V3530 உள்ள பழுதுகளை சரி செய்வதற்கு ரூ.17000/— மதிப்பீட்டில் எடுத்து செய்வதற்கு 23.9.2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்தத்தாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1. | M/s.மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் | ரூ.18040 |
| 2. | M/s.கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் | ரூ.16850 |

அ.குறிப்பு

1.பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்களும் வைப்புத்தொகை செலுத்தி உள்ளார்கள்

2.மேற்காணும் வேலைக்கான அதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றம் தனது 28.8.09–ம் தேதிய 991–வது தீர்மானத்தில் ஒப்புதல் வழங்கி உள்ளது.

3.பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் M/s.கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனம் ரூ.16850/–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளது. எனவே இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.அ2/5030/07)

**தீர்மானம் எண்.1008: குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் :16**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மேற்கு கடற்கரை சாலை, மரமடி சந்திப்பு மேலும் துறைமுகத்தெரு ஆகிய இடங்களில் வால்வு தொட்டிகள் அமைப்பதற்கு ரூ.45000/– மதிப்பீட்டில் எடுத்து செய்வதற்கு 23.9.2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்தத்தாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.பி.தங்கமணி | 0.03% மதிப்பீட்டைவிட குறைவு (ரூ.37266.00) |
| 2. | திரு.சி.சந்திரசேகர் | 6.63% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.39750.00) |

அ.குறிப்பு

1.பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்களும் வைப்புத்தொகை செலுத்தி உள்ளார்கள்

2.மேற்காணும் வேலைக்கான அதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றம் தனது 28.8.09–ம் தேதிய 990–வது தீர்மானத்தில் ஒப்புதல் வழங்கி உள்ளது.

3.பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் திரு.பி.தங்கமணி என்பவர் 0.03% மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**தீர்மானம் எண்.1009: குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.தங்கமணி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலையுத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் :17**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட Bore-களில் தற்போது இயங்கும் மோட்டார்களில் பல 5–ஆண்டுகளுக்கு முன்பு வாங்கப்பட்டவை. அவைகள் பலமுறை பழுதுகள் ஏற்பட்டு சரி செய்யப்பட்டவை. ஆகவே அவைகளை மாற்றிவிட்டு 10HP நீர்மூழ்கி மோட்டார்கள் 4 எண்ணம், 5HP நீர்மூழ்கி மோட்டார் 1 எண்ணம் வாங்கி ஆழ்துளை கிணறுகளில் மாட்டுவதற்கு ரூ.300000/– மதிப்பீட்டில் எடுத்து செய்வதற்கு 23.9.09 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள்

பெறப்பட்டன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்தத்தாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.சி.சந்திரசேகர் | 4.96% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.312694.00) |
| 2. | திரு.சி.தேவகரீம்சேம் | 7.16% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அ.குறிப்பு**

1.பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்களும் வைப்புத்தொகை செலுத்தி உள்ளார்கள்

2.மேற்காணும் வேலைக்கான அதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றம் தனது 28.8.09–ம் தேதிய 975–வது எண் தீர்மானத்தில் ஒப்புதல் வழங்கி உள்ளது.

3.பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்த புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகமாக உள்ளன. மேலும் மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.சி.சந்திரசேகர் என்பவர் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக 4.96% மதிப்பீட்டைவிட அதிகமாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**தீர்மானம் எண்.1010: ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளவர்களில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சந்திரசேகரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலையுத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் :18**

குளச்சல் நகராட்சியில் 45 எண்ணம் தெருவிளக்கு மெயின் சுவிட்சுகள் உள்ளன. அவற்றை உதவியாளர்களைக் கொண்டு ON / OFF செய்யப்பட்டு வருகின்றன. அதனால் நேரம் வீணாவதுடன் மின்சாரமும் அதிகமாக செலவாகிறது. ஆகவே தெருவிளக்கு–க்கு ஆகும் மின்சாரத்தை சேமிக்கும் வகையில் நகராட்சி அலுவலகத்தில் இருந்து மிக தொலைவில் உள்ள தெருவிளக்கு Switch Point-களில் 10 எண்ணம் தேர்வு செய்து, அதற்கு சோதனை அடிப்படையில் தானியங்கி சுவிட்சுகள் அமைக்க உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 1,30,000/– ஆகும். மேற்கண்ட பணியினை செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.1011: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் :19**

குளச்சல் நகராட்சியில் உள்ள மினி லாறி TN.74.T.5508 –க்கு கிளட்ச் கீழ்கண்ட பழுதுகள் ஏற்பட்டுள்ளது.

1) பிளட்ச் பிளேட்
2) கிளட்ச் பக்கெட்
3) பிரேக் ஆயில்

மேற்கண்ட பழுதுகளை சரி செய்வதற்கு ரூ. 2260/– மதிப்பீட்டில் எடுத்து செய்வதற்கு 07.07.2009 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டன.

(1) ரெஞ்சித் மோட்டார் ஒர்க்ஸ், குளச்சல் – ரூ. 2525.00
(2) ஷஜி மோட்டார் ஒர்க்ஸ், குளச்சல் – ரூ. 2425.00
(3) மிஸ்பா சர்வீஸ் சென்டர், விகேபி.பள்ளிஅருகில், குளச்சல். – ரூ. 2260.00

அ. குறிப்பு :
1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2) அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.1012: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் :20**

குளச்சல் நகராட்சி ஆணையரின் பேஸ்மில்லி ரப்பர் ஸ்டாம்ப் 2 எண்ணம் செய்த வகைக்கு தாசன் ஆப்செட் ஸ்டேஷனரி நிறுவனத்திற்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15 –ன்படி ரூ. 275/– வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அ. குறிப்பு :
மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.1013: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் :21**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மினி லாறி TN.4.T.5508 –க்கான இன்சூரன்ஸ் காலம் 19.09.2009 வுடன் முடிவடைவதால் இன்சூரன்ஸ் பாலிசி புதுப்பிக்க வேண்டி உள்ளது. எனவே மேலும் ஓராண்டுக்கு இன்சூரன்ஸ் புதுப்பிக்கவும், இன்சூரன்ஸ் தொகை ரூ.10,183/– ஐ தி ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்க்கு வழங்குவதற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அ. குறிப்பு :
1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2) அவசர அவசியம் கருதி, மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தலைவர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று இன்சூரன்ஸ் பிரிமியம் செலுத்தியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.1014: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் :22**

இந்நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள், ஓட்டுநர்கள் மற்றும் துப்புரவுப்பணி மேற்பார்வையாளர்கள் ஆகியோர்களுக்கு நபர் ஒன்றுக்கு இரண்டு சீருடைகள் வீதம் மொத்தம் 54 நபர்களுக்கு தேவையான சீருடைகள், நாகர்கோவில் என்டைஸ் விற்பனை நிலையத்தில் இருந்து வாங்கி வழங்குவதற்கும் மற்றும் தையல் கூலி வழங்குவதற்கும் ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.70,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ. குறிப்பு :
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி, மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, சீருடைகள் வாங்கி வழங்கியதையும், தையல் கூலி வழங்கியதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.1015: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் :23**

இந்நகராட்சி ஆணையாளர் அவர்கள் அலுவலக விஷயமாக 08/2009 மாதத்தில் பயணம் மேற்கொண்ட வகையில் பயணபடி தொகை ரூ.2120/- வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.1016: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் :24**

இந்நகராட்சியில் பணிபுரியும் கீழ்கண்ட பணியாளர்கள் அலுவலக விஷயமாக பயணம் மேற்கொண்ட வகையில் பயணப்பட்டியல் தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியாளர்கள் பெயர் மற்றும் பதவி | பயணம் மேற்கொண்ட மாதம் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திருமதி.எஸ்.சுதா,<br>நகரமைப்பு ஆய்வாளர் | 08/2009 | 920 |
| 2. | திருமதி.அ.நிர்மலாஜாய்,<br>இளநிலை உதவியாளர் | 08/2009 | 408 |
| 3. | திரு.ற்றி.கிருஷ்ணமூர்த்தி,<br>மேலாளர் | 09/2009 | 2393 |
| 4. | திரு.வெ.கண்ணையா,<br>நகராட்சி பொறியாளர் | 06/2009<br>07/2009<br>08/2009 | 1193<br>340<br>2133 |
| 5. | திரு.எஸ்.ராபின்சுந்தர் சிங்,<br>கணினிபுள்ளிவிபரக்குறிப்பாளர் | 08/2009 | 1436 |

**அ.குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.1017: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் :25**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பர்னட்டி விளையில் உள்ள ஆழ்துளை கிணற்றில் உள்ள மின் மோட்டார் பழுது அடைந்துள்ளது. மேற்காண் பழுதினை சரி செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.10000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.அவசிய அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.3482/09/இ1)

**தீர்மானம் எண்.1018: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் :26**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில் குடிநீர் விநியோகத்தை சீரமைக்கும் பொருட்டு மாதா காலனி நீர் தேக்க தொட்டியில் இருந்து சொசைட்டி இருக்கும்

துறைமுகத்தெரு பகுதிக்கும் துறைமுக தெருவில் உள்ள நீர்தேக்க தொட்டி மூலம் துறைமுகத்தெரு 3—ம் நம்பர் பகுதிக்கும் குடிநீர் விநியோகம் செய்வதற்கு துறைமுகத்தெருவில் க.எண்.17/56—ன் பின்னால் 4” Sluice வால்வுகள் 2 எண்ணம். துறைமுக தெருவில் போட 4” Sluice வால்வுகள் 2 எண்ணம் மற்றும் கேட் வால்வு 1 எண்ணம் அமைப்பதற்கு ரூ.51000/—க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.அவசிய அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.3483/09/இ1)

**தீர்மானம் எண்.1019: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் :27**

நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதி தொகை நகராட்சி மான்யம் ரூ.5000/—ஆக இருந்ததை ரூ.10000/— ஆக உயர்வு செய்து 15.9.2000—க்கு பின் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு முன்தேதியிட்டு வழங்க அரசாணை எண்.340 நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் (நப—3) துறை நாள்.8.8.08—ல் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி அரசு கூடுதலாக அறிவித்துள்ள தொகை ரூ.5000/— வழங்க கேட்டு கீழ்கண்ட பணியாளர்கள் விண்ணப்பம் செய்துள்ளார்கள். அதன்படி மேற்படி தொகையினை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியாளர்கள் பெயர் மற்றும் பதவி | ஓய்வு பெற்ற நாள் | வழங்கவேண்டிய தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு.எம்.செல்வராஜ்,<br>ச.உதவியாளர் | 31.01.2004 | 5000 |
| 2. | திருமதி.ஏ.ஜெஸ்பி,<br>ம.பே.உ | 31.10.2000 | 5000 |
| 3. | திரு.மார்த்தாண்டன்<br>து.ப | 31.07.2007 | 5000 |
| 4. | திரு.நூர்முகமது<br>து.ப.மே. | 31.05.2005 | 5000 |

**தீர்மானம் எண்.1020: அனுமதித்திட ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி